Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி புரட்டாதி 21 ஆம் நாள் ஜ. அவ்வல் பிறை 30 (7-10-64) புதன்கிழமை இதழ் 238



லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர்
கணிதம்:- இரகுநாதையர் அவர்கள். லீலா ஸ்டோர்ஸ், கொழும்பு.

# பத்திரிகை மசோதா ஒத்திவைப்பு

## அடுத்த வருடமே பார்லிமெண்டில் கொண்டுவரப்படும்

### சபாநாயகர் அறிவிப்பு; எதிர்க்கட்சியினர் பாராட்டு

கொழும்பு, செவ்வாய்

**அடுத்த வருடத்துக்கு முன்னர் பத்திரிகை மசோதா ஜனப்பிரதிநிதிகள் சபைக்கு கொண்டுவரப்பட மாட்டாதென சபாநாயகர் இன்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் அறிவித்தார்.**

எதிர்க் கட்சித் தலைவர்களுடனும் பார்லிமெண்ட் சட்ட உத்தியோகஸ்தர்களுடனும் சுமார் 100 நிமிடநேரம் வரை ஆலோசனை நடத்திய பின்னரே சபாநாயகர் இவ்வித அறிவித்தலை வெளியிட்டார்.

ஜன பிரதிநிதிகள் சபை இன்று பிற்பகல் 2-30 மணிக்கு கூடியபோது ஆரம்பத்தில் யு. என். பி. அங்கத்தவர் ஜனப் ஹைனு மரிக்காரும் எம். ஈ. பி. அங்கத்தவர் திரு. லக்ஷ்மன் ராஜபாக்ஷவும் ஜனப்பிரதிநிதிகள் சபை குமாஸ்தாவிடம் பத்திரிகை மசோதா மீதான இரண்டாவது வாசிப்பு 1965-ம் வருடம் ஜனவரி 2-ம் திகதியன்றே இடம் பெறவேண்டும் எனக் கோரும் பிரேரணையொன்றுக்கான முன்னறிவித்தலை தெரிவித்தனர்.

மேற்படி இரு எம். பி.க்களும் கொண்டு வந்த முன்னறிவித்தலை இரண்டாவது பிரிவின் 77-வது நடைமுறை விதிகளுக்கமைய இருப்பதாக சபாநாயகர் தெரிவித்து அதற்கமைய தாம் பத்திரிகை மசோதா மீதான இரண்டாவது வாசிப்பை அடுத்த வருடம் வரை ஒத்திவைப்பதாக அறிவித்தல் செய்தசர்.

இம் மசோதா மீதான இரண்டாவது வாசிப்பு ஒத்திவைக்கப்பட வேண்டுமென்பதற்கான முன்னறிவித்தலை இரண்டு எதிர்க்கட்சி எம். பிக்களும் கொண்டு வந்தபோது அரசாங்க எம். பி. க்களுக்கும் எதிர்க்கட்சி எம். பி. க்களுக்குமிடையில் குழப்பமேற்பட்டது.

இதனைத் தொடர்ந்து சபாநாயகர் சபைக் கூட்டத்தை சுமார் 2 மணிநேரம்வரை ஒத்திவைத்தார். சமீபகாலங்களில் நீண்ட நேரம் வரை சபைக் கூட்டத்தை ஒத்திவைத்தது இதுவே முதற் தடவையாகும். சபைக் கூட்டம் கேள்வி நேரத்துக்கு 10 நிமிட நேரத்துக்குப் பின்னர் (2-40-க்கு) ஒத்திவைக்கப்பட்டு மாலை 5 மணிக்கு கூட்டப்பட்டது.

சபாநாயகர் மேற்கொண்ட நடவடிக்கையைப் பாராட்டி எதிர்க் கட்சியினர் எல்லோரும் சபாநாயகருக்கு தமது பாராட்டுதலைத் தெரிவிக்குமுகமாக பலத்த கரகோஷம் செய்தார்கள்.

சபைககூட்டத்தில் பிரசன்னமாயிருந்த டாக்டர் கொல்வின் ஆர். டி' சில்வா "சபை நாளை கூடும்போது பார்த்துககொள்வோம்" என ஆவேசத்துடன் கூறினர்.

வட பகுதி அசைஸ் விசாரணை

## பருத்தித்துறை கொலைவழக்கில் எதிரிக்கு 6 வருடசிறை

### 'கொலைக்குற்றத்தை ஒப்புக்கொண்டாலும் கைமோசக்கொலைதான்' —ஜூரி

யாழ்ப்பாணம், புதன்

"கொலைக்குற்றத்திற்கு எதிரி குற்றவாளியென ஒப்புக்கொண்டபோதிலும், கொலைக்குற்றத்திற்கு எதிரி குற்றவாளியல்லவென்றும் கைமோசக்குற்றத்திற்கே எதிரி குற்றவாளி என்றும் ஜூரர்கள் தெரிவித்தது நீதிமன்றத்தில், நீதி நியாயம் வழங்கப்பட்டிருக்கிற தென்பதற்கு அத்தாட்சி" என்று பருத்தித்துறை கொலை வழக்கில் எதிரிக்கு 6 வருடக் கடுழியச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தபோது நீதியரசர் டாக்டர் எச். டபிள்யூ. தம்பையா கியூ. சி. குறிப்பிட்டார்:

ஜூரர் சபையினர் நேற்றுக்காலை பருத்தித்துறை கொலை வழக்கு விசாரணை முடிந்ததும், சுமார் 80 நிமிடங்கள் வரை தங்கள் அறைக்குள் சென்று மந்திராலோசனை நடத்தியபின் நீதிமன்றத்துக்குள் வந்து ஆசனத்தில் அமர்ந்தனர்.

நீதியரசர் வந்து தமது ஆசனத்தில் அமர்ந்ததும், ஜூரிகள் தலைவர் எழுந்து 'எதிரி கொலைக்குற்றத்திற்கு குற்றவாளியல்லவென்றும், கைமோசக் கொலைக்குற்றத்திற்கு குற்றவாளியென்றும் தாங்கள் ஏகமானதாகமுடிவு செய்வதாகக் கூறினர். ஜூரிகளின் முடிவை ஏற்றுக்கொண்ட நீதியரசர் எதிரிக்கு 6 வருடக்கடுழியச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

தீர்ப்பளிக்குமுன் நீதியரசர் எதிரிக்குக்கூறியதாவது:

மதுபான வெறியிலிருந்தால் கொல்லும் நோக்கம் இருக்கவில்லை. ஆனல் அக்காயம் மூலம் மரணம் ஏற்படும் என்று தெரிந்திருக்கவேண்டும். நீர் உமது வாக்குமூலத்தில் உண்மைபேசியபடியால் இரக்கம் காட்டவேண்டும. வாக்குமூலத்தில் சில வசனங்கள் பெருமையாகக் கூறப்பட்டிருந்தபோதிலும் உம்மீது இரக்கம் காட்டுகிறேன்"

## இராணுவ பலத்தை அதிகரிக்கவேண்டும்

### மண்டலசார்பற்ற நாடுகளுக்கு அதிபர் சுகர்னோ யோசனை

கெய்ரோ, அக் 6

கெய்ரோ மகாநாடு இன்று மீண்டும் கூடியபொழுது சர்வதேசநிலைமை குறித்து விவாதிக்கப்பட்டது. லெபனன் ஜனதிபதி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் முதலில் பேசிய இந்தோனேஷிய அதிபர் சுகர்னோ மண்டலசார்பற்ற நாடுகள் எல்லாம் ஒன்று சேர்ந்து தங்களது இராணுவ வலிமையை பெருக்கிக் கொள்ளவேண்டும் என்று கூறினர்.

"மண்டலசார்பற்ற நாடுகள் தங்களிடையே மலிந்துள்ள பூசல்களை முதலில் ஒழித்து விடவேண்டும். இதன்பின்னரே கூட்டுச் சேர்ந்து இராணுவ பலத்தை அதிகரிக்க வேண்டும்" என்றும் அவர் கூறினர்.

தென்கிழக்காசியாவின் யுத்தக்குமுறல்கள் இன்னும் இருந்து வருகிறதென்றும் கொந்தளிப்பு அதிகரித்திருக்கின்றன என்றும் அவர் கூறினர்.

கிரிக்கெட் டெஸ்ட்

## ஆஸி: 397 இந்தியா 4:24

சென்னை, அக். 6

ஆஸ்திரேலியாவுக்கும் இந்தியாவுக்குமிடையே இங்கு நடைபெறும் கிரிக்கெட் டெஸ்டின் நான்காவது நாளான இன்று ஆட்ட நேர இறுதி வரை இந்தியா நான்கு விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 24 ஓட்டங்கள் எடுத்துள்ளது. ஆஸ்திரேலியா தனது இரண்டாவது இன்னிங்ஸில் மொத்தம் 397 ஓட்டங்கள் எடுத்திருக்கிறது.

இந்தியா தனது இரண்டாவது இன்னிங்ஸை மிகவும் மோசமாகவே ஆரம்பித்தது. இந்தியாவின் இரண்டாவது இன்னிங்ஸ் ஆரம்பமான பொழுது ஜெயசிம்மா முதலில் துடுப்பெடுத்தாடினர். ரசிகர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக மக்கன்ஸியின் முதல் பந்து வீச்சிலேயே ஜெயசிம்மா ஓட்டமெதுவும் எடுக்காமல் ஆட்ட மிழந்தார். இதன்பின்னர் இந்திரஜித்சிங்கும் ஓட்டமெதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்தார். பின்னர் சர்தேசாய் 14 ஓட்டங்களும் கிருபாள்சிங் 01 ஓட்டமும் எடுத்து ஆட்டமிழந்தனர், மஞ்சரீகர் 08 ஓட்டங்களும் ஹனுமான் சிங் ஆட்டமெதும் எடுக்காமலும் வனையடிக்கொண்டிருக்கின்றனர். போட்டி நாளை புதன்கிழமை தொடர்ந்து நடைபெறும்.

ஆஸ்திரேலிய முதல் இன்னிங்ஸ்: 211. இந்தியா 276 ஆஸ்திரேலியா இரண்டாம் இன்னிங்ஸ்: 397.

## திறப்புக்கோர்வை கண்டெடுக்கப்பட்டது

யாழ்ப்பாணம், புதன்

வண்ணை சிவன்கோவில் மேற்கு வீதியில் ஒரு திறப்புக் கோர்வை கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் "ஈழநாடு" காரியாலயத்திற்கு வந்து பெற்றுக் கொள்ளலாம்.

பருத்தித்துறை கொலைவழக்கு விசாரணை விபரம் 5-ம் பக்கம் பார்க்க

சேமியுங்கள்! சேமியுங்கள்!! சேமியுங்கள்!!!

இன்னும் 4 நாட்களே

| | |
|---|---|
| சுத்த 'நைலெக்ஸ்' அச்சிட்ட சேலைகள் | 43-50 |
| சுத்த Butter'நைலோன்' அச்சிட்ட சேலைகள் | 39-75 |
| 'றெரிலீன்' பலவர்ண சேலைகள் | 39-50 |
| Raw Cotton நூல் சேலைகள் | 28-75 |
| காஷ்மீர் 'சரமேஸ்' சேலைகள் | 22-50 |

டயரும்ஸ்

மெயின் வீதி, யாழ்ப்பாணம்.

சைலால்




முகப்பரு, சொறிசிரங்கு கரப்பான், கக்கூஸ்பத்து, வெட்டுக்காயம், வேனல் கட்டி, தீப்பட்டபுண், சேத்துப்புண், பித்தவெடிப்பு முதலிய சரும வியாதிகளைக் குணப்படுத்துகிறது. துணிகளில் கறைபிடிக்காது.

தயாரிப்பவர்கள் "ராதா புறடக்ஸ்"

விநியோகஸ்தர்:- எஸ். சுப்பிரமணியம் அன் கோ

போன்: 541 53, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். 160, செட்டியார் தெரு, கொழும்பு.

நமக்கு

யார் அன்பு செய்கின்றார்களோ அவர்கள் வாழ்கின்றார்கள். சுயநலமுள்ளவர்கள் சாகின்றனர். ஆகவே அன்புக்காக அன்பு செய்வோம். அன்பு தான் வாழ்வதற்கான ஒரே வழி.

— சுவாமி விவேகானந்தர்

ஈழநாடு
EELA NADU

EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna
Telegram: EELA NADU Jaffna
Phone 389

குரோதி ஆண்டு
புரட்டாதி மீ 21 உ (7-10-64)

## பேராதனை சங்கடம்

பேராதனைப் பல்கலைக் கழகம் விடுமுறைக்குப் பின் மீண்டும் ஆரம்பமாகியுள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து புதிய மாணவர்கள் உயர்தரக்கல்வி பெறுவதற்காக பேராதனைக்குச் சென்றுள்ளனர். நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் சென்றுள்ள அதிகமான மாணவமாணவியர் அங்கு இடநெருக்கடி காரணமாகவும் இதர வசதியீனங்கள் காரணமாகவும் படும் சங்கடங்களை ஒரு தமிழ்மாணவியின் தந்தையார் நம்மிடம் விளக்கினார்.

பல்கலைக்கழகத்தில் இடநெருக்கடியைத் தவிர்ப்பதற்கு வேறு பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட வேண்டுமென்று பலரும் பலசமயங்களிலும் யோசனை தெரிவித்து வந்துள்ளனர். அரசாங்கமும் மந்திரிகளும் இந்த யோசனையை ஏற்றுக் கொண்டதுடன் யாழ்ப்பாணத்தில் இராமநாதன் பல்கலைக்கழகமும் கொழும்பில் ஸாஹிராவில் ஓர் இஸ்லாமிய பல்கலைக் கழகமும் நிறுவப்படும் என்றும் சிலவருடங்களுக்குமுன் சிம்மாசனப் பிரசங்கத்தில் அறிவித்தனர். இராமநாதன் பல்கலைக்கழகம் அமைப்பதற்கென அடையாள மான்யம்கூட சென்ற வருட வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டது. அதன்பின் அதைப்பற்றிய பேச்சையே காணோம்.

கொழும்பு, பேராதனைப்பல்கலைக்கழகத்துடன் வித்தியாலங்கார, வித்தியோதய பிரிவுப் பல்கலைக்கழகங்களையும் சேர்த்து தென்னிலங்கையில் மூன்று பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. பேராதனை பல்கலைக்கழகம் நாட்டின் சகல பிரிவினருக்குமாக அமைக்கப்பட்ட பொதுவான பல்கலைக்கழகமாக இருப்பினும் ஜனத்தொகை விகிதாசார அடிப்படையில் மாணவர்களைத் தெரிவு செய்வதாலும் சிங்களம்மட்டும் சட்ட அமுலினாலும் அங்கு சிங்கள மாணவர்களுக்கே வாய்ப்பும் வசதியும் உண்டு. வித்தியாலங்கார, வித்தியோதய பிரிவுப் பல்கலைக்கழகங்கள் பொதுவாக பௌத்தர்களுக்காகவே உருவானவை. எனவே இப்பொழுதுள்ள மூன்று பல்கலைக்கழகங்களும் இந்நாட்டிலுள்ள பெரும்பான்மை சமூகத்துக்கே உதவுகின்றன. வடக்கிலும் கிழக்கிலுமுள்ள தமிழ் பேசும் மக்களுக்கு உயர் கல்வி பெறுவதற்கான பல்கலைக்கழக வாய்ப்பு மிகவும் குறைவு என்றே சொல்லலாம். கடந்த காலத்தில் இலங்கை பல்கலைக்கழகத்தில் இடம் கிடைக்காதவர்கள் அண்டையிலுள்ள இந்தியாவுக்குச் சென்று அங்குள்ள பல்கலைக்கழகங்களில் கல்விபெறக் கூடியதாக இருந்தது. செலாவணிக் கட்டுப்பாடுகளினாலும் புதிய சட்ட திட்டங்களினாலும் அந்தவாய்ப்பும் இன்று கிடையாது.

தமிழ்பேசும் பிள்ளைகளின் எதிர்காலத்தைப்பற்றிக் கவலை கொண்ட பல பெரியார்கள் தமிழ் பல்கலைக்கழகமொன்றை ஸ்தாபிக்க எடுத்துக் கொண்ட முயற்சிக்கும் அரசாங்கம் ஆதரவளிக்கவில்லை. ஆதரவு அளிக்காததுமன்றி தமிழ்மக்களுக்கென கலாசாரப் பல்கலைக் கழகமே நிறுவித் தருவதாக வாக்குறுதியளித்து அதையும் நிறைவேற்றாமல் காலம் கடத்தி வருகின்றது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து பேராதனைக்கும் கொழும்புக்கும் பல்கலைக்கழகக் கல்வி பெறச் செல்லும் மாணவமாணவியர் அனுபவிக்கும் பிரயாணக் கஷ்டங்களும் பின்னர் இடநெருக்கடியால் அனுபவிக்கும் கஷ்டங்களும், இவர்களை உயர் கல்விக்காக அனுப்பிவிட்டு பணத்தை வாரியிறைப்பதுடன் அவர்களின் நிலையை எண்ணி சதா கவலையும் வேதனையும் அடையும் பெற்றோர் பலராவர்.

யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகமும் காலியில் ஒரு பல்கலைக்கழகமும் நிறுவவேண்டியது அவசியமென பல்கலைக்கழக உப அத்தியட்சகர் சேர். நிக்கலஸ் அட்டிகலைகூட சமீபத்தில் தெரிவித்திருந்தார். தமிழ்ப் பேசும் பகுதியில் பல்கலைக் கழகம் ஒன்று நிறுவப்பட வேண்டியதன் அவசரத்தை அரசாங்கம் உணராமலிருக்கமுடியாது. கொடுத்த வாக்குறுதியின்படி விரைவில் யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகம் அமைக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையேல் தமிழ்பேசும் மக்களுக்கு நீதி வழங்கப்படுமென்றும் பாரபட்சம் காட்டப்படாதென்றும் கூறுவதில் அர்த்தமில்லை. தமிழ்பேசும் மக்களின் பொறுமைக்கு ஓர் எல்லையுண்டு.

# அன்னையின் அடி தொழுதால் அடையலாம் பேரின்பம்

— வித்துவான் வசந்தா வைத்தியநாதன் —

(நேற்றைய தொடர்ச்சி)

பட்டரும் வானவெளியில் பவனி வரும் முழுத்திங்கள் கண்டு உள்ளம் பூரித்தார். ஆவிக்கடைக்கலமான அன்னையின் அருளினை நினைந்து நினைந்து நெக்குகினார். அம்மையும் "அன்பனே! குறையையும் நிறைவித்து முதலும் கடையும் கூட்டி முடித்து இப் பைந்தமிழ் அலங்கலை எனக்கு அணிவி" என்று ஆணை தந்தனள் ஆணைவழி நின்று பட்டரும் 'அபிராமி அந்தாதி'யினை நிறைவித்தார்.

கடலாடிக் கடலூர் போந்த காவலனும் மதியொளி கண்டு மயங்கினான். தனது ஆணவத்தினை நினைந்து வெட்கினான். அருட்செல்வரை அவமதித்த தம் அறிய மைக்கு வருந்தி, ஓடி வந்து அவரது திருவடிகளில் வீழ்ந்து வணங்கித்தன் பிழை பொறுக்குமாறு மன்றாடினான். தான் இழைத்த மாபெரும் தவற்றிற்கு ஈடாக தன்னிடமிருந்து ஏதேனும் ஏற்குமாறு வேண்டினான். ஓட்டையும், செம்பொன்னையும் ஒக்கவே நோக்கும் அருந்தவச் செல்வர் பொருளேற்க மறுத்தார். ஆனாலும் அவரது சந்ததிக்காவது ஏதும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும் என்று வற்புறுத்தினான். பின்னர் பட்டரின் விருப்பப்படி "வேலிக்குக் குறுணி" எனமான்யமாகச் சூரிய சந்திரர் உள்ள வரை கொடுத்துவர ஆணை பிறப்பித்தான் சரபோஜி மன்னன். இதற்குரிய உரிமைச் செப்புப்பட்டயம் இன்றும் பட்டரது சந்ததியாரிடம் உள்ளது.

இனி அன்னையின் தன்மையை அந்தாதி மூலம் ஒரு சிறிது பார்ப்போம். ஒளிர்கின்ற திலகத்தினையும், மாணிக்கத்தினை ஒத்த மாதுளம் மலரினையும், மின் கொடியையும் ஒத்த அழகுருவான அன்னை அபிராமியே நமது வாழ்க்கையின் விழுத்துணை. பனி நீர் துளிக்கின்ற பூங்கணையையும், கரும்புச் சிலையையும், பாசாங்குசத்தையும் கையில் அணைத்த அன்னையே நமக்குத் துணையாகவும், தொழுந்தெய்வமாகவும், நன்ற தாயாகவும், சுருதிகளின் பணையாகவும் விளங்குகின்றான். "மனிதரும், தேவரும், முனிவர்களும் தங்களது முடியினால் உனது திருவடியினை வணங்கும் பெருமை மிக்கவனே! ஒளிர்கின்ற கொன்றை வார் சடையின் மீது குளிர்ந்த நிலவினையும், பாம்பினையும், கங்கையினையும் அணிந்த புனிதரும், நீயும் எனது அறிவிலே எந்நாளும் பொருந்தவேண்டும்" என்று பட்டர் வேண்டுகின்றார்.

தயிர் உறுமத்தினைப்போன்று சுழலும் ஆவிக்கு அடைக்கலம் தேவர் மூவரும் போற்றும் அன்னையே என்கிறார். நின்றும், இருந்தும், கிடந்தும் அன்னையைத் தொழும் முறையை விவரிக்கின்றார். தன்னை அணுகாதவர்களுக்குப் பிணியாயும், பிணிக்கு மருந்தாயும் விளங்குகின்ற பெருமாட்டியின் பாதப் போதுகளன்றி வேறு தெய்வத்தை வணங்காமையை வீறுடன் விளம்புகின்றார். "வெவ்விய காலன் உயிரைக் கவர வரும் பொழுது இறைவனின் செம்பாதியில் இடம்பெற்ற, நீ வந்து என்னைக் காக்கவேண்டும்" என்றும் "என்னுடைய வினைப்பயனால் வாழ்நாள் முடிந்து காலன் என்னை அணுகும் பொழுது உன்னை 'அன்னையே' என்று கூறி உன்னிடம் அடைக்கலம் புகுவேன்" என்றும் "ஆசையாகிய கடலில் உழன்று அருளற்ற அந்தகன் கைப் பாசத்தில் நான் பிணிக்கப்படும்பொழுது, உனது திருவடித் தாமரைகளை என் சென்னியின்மேல் வலிய வைத்து, ஆண்டுகொள்ள வேண்டும்" என்றும் கசிந்து உருகுகின்றார். மேலும் ஓர் இடத்தில் பிறவாமல் இருக்கும் பெற்றியை அருளுமாறு கேட்கின்றார்.

சொல்லும் பொருளும் என நடமாடும் துணைவருடன் புல்லும் பூங்கொடியை அல்லும் பகலும் தொழுபவர்கள், அழியா அரசும், தவநெறியும், சிவலோகமும், அமராவதி ஆளுகையும் கைவரப் பெறுவர்; விரவும் புதுமலரிட்டு அன்னையின் அடி தொழுவார், பல்லியங்கள் ஆர்த்தெழ, வெள்ளையானையின் மீது அமரும் இந்திர பதவியினை அடைவர் என்கின்றார் பட்டர். அன்னையின் பல திருப்பெயர்களை நாத்தழும்பேறத் துதிப்பது வியக்கத்தக்கது. அன்புடன் அன்னையை வழிபடுவோர் தனம், கல்வி, ஒரு நாளும் தளர்வறியா மனம், தெய்வவடிவு, நெஞ்சில் வஞ்சமில்லா, நண்பர்கள் கூட்டம் முதலிய யாவற்றையும், அடைவார்களெனக் குறிப்பிடுகின்றார். நாயாகிய தன்னையும் அன்னை வலிய வந்து ஆண்டு கொண்ட தன்மையை விளக்கும் இடங்கள் உன்ன உன்ன பேரின்பம் பயக்கும் பகுதிகளாகும்,

இவ்வாறு தேன் பிலிற்றும் இன்தமிழ்ச் சொற்களால் அன்னையின் புகழினைக் கூறும் இடங்கள் மெய்மயிர் சிலிர்க்க வைக்கும். நவராத்திரி முதல் மூன்று நாட்களில் அன்னை உமையின் புகழினைக் கூறும் நூற்றொரு பாடல்களைக் கொண்ட இவ்வபிராமி அந்தாதியினைப் பாராயணம் செய்வோர் எல்லா நலன்களும் எய்தப் பெறுவர். "அருளுக்கோர் அபிராமி"யின் கடைக்கண் நோக்குக்கு இலக்காகி, மண்ணுலகன்றி விண்ணுலகும் ஆளுவர் என்பதற்கு ஐயமுண்டோ?

ஆசிரியருக்குக் கடிதங்கள்

## மதுவிலக்கை கைக்கொள்ள தக்க தருணம் இதுவே

யாழ்ப்பாண மக்கள் கள் குடிப்பதனால் வரும் கெடுதல்கள் பற்றியும் அதனால் ஏற்படும் விளைவுகள் பற்றியும் அண்மையில் நீதிமன்றத்தில் நீதியரசர் தம்பையா சில குறிப்புக்கள் கூறியிருந்தார். அக்கூற்றினால் அவர் பெரும் பொதுச்சேவையைநாட்டிற்குச் செய்தவராவார். மகாத்மா காந்தியின் ஜெயந்தி தினத்தன்று நீதியரசர் தம்பையாவினுடைய கருத்தைக்கொண்டு தாங்கள் தீட்டியிருந்த தலையங்கம் மிகவும் பொருத்தமானதும் மறுக்கமுடியாததுமான உண்மைகளேயாம்.

மதுவிலக்குக் கொள்கையை எங்கள் நாட்டில் கடைப்பிடிக்க இது தக்க தருணமாகும். திருவள்ளுவர், நாவலர், மகாத்மா காந்தி மற்றும் நாயன்மார்கள் போன்ற அறிஞர்களின் நாமங்களையும், போதனைகளையும் துதிபாடும் மக்கள் இப் பெரியார்களுடைய அறிவுரைகளையும் நடைமுறையில் கையாண்டு, நாட்டு மக்களுக்கு ஒரு முன்மாதிரியாக இருக்க வேண்டியது அவர்கள் கடமையாகும்.

நீதியரசர் தம்பையாவினுடைய அறிவுசான்ற கருத்துக்களுக்கும் தங்கள் தலையங்கத்தில் கூறப்பட்டிருந்த கருத்துக்களுக்கும் வேண்டிய மதிப்புக் கொடுக்கப்படும் என்று நான் பூரணமாக நம்புகிறேன்.

எஸ். சிவசுப்பிரமணியம்
கொழும்பு, 12.

## தியேட்டர் வேண்டும்

சுழிபுரத்தில் உள்ள சினிமாத் தியேட்டரை அவ்விடத்திலிருந்து அகற்றக்கூடாது என்பதே சுழிபுரம் கிராம மக்கள் பலரின் விருப்பமுமாகும். இத் தியேட்டர் இருப்பதால், பின் தங்கிய வருமானத்தை யுடைய சுழிபுர கிராமசபைக்கு அதிக வருமானம் கிடைப்பதால் அவ்வூரில் உள்ள குளங்கள், கிணறுகள், வாய்க்கால்கள், ஒழுங்கைகள் ஆகியன திருத்தப்படுகின்றன.

இக்கிராமத்தில் வரிகொடுப்போர் சினிமாத்தியேட்டரை அகற்றுவதற்கு விரும்பமாட்டார்கள். எளிய மக்கள் இங்கிருந்து பெரும் கஷ்டப்பட்டு யாழ்ப்பாணம் சென்று சினிமாப் பார்க்கவேண்டியுள்ளது இத்தியேட்டர் இங்கு இருந்தால் மக்களுக்கு பயனைக்கொடுக்கும். கல்வி அறிவு இல்லாத மக்கள் சினிமாமூலம் நல்ல அறிவைப் பெறமுடியும். நாகரிகத்தையும் கற்றுக்கொள்ள ஏதுவாக இருக்கும்.

சுழிபுரவாசி

## ஐயாறன் எழுதுவது

சென்ற நான்கு நாட்களாக யாழ்ப்பாணத்திலே இசை விழாவை அண்ணாமலை இசைத் தமிழ்மன்றத்தார் சிறப்பாக நடத்தினர். அண்ணாமலைபல்கலைகழக பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் இவ்விழாவுக்கு அனுப்பிய நல்லதோர் வாழ்த்துச்செய்தி என் மனதைக் கவர்ந்தது.

"..........இலங்கையிலோ தமிழிசைக்கல்லூரி இல்லை. அதனால் இலங்கைத் தமிழர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைக்கல்லூரிக்கே கற்க வரவேண்டியதாயிற்று. ஆனால் இப்போதோ இப்படிப்படிக்க வருவதற்கு வாய்ப்பில்லாதபடி இலங்கை துரைத்தனம் செய்துவருகிறது. இராமநாதன் கல்லூரி பல்கலைக் கழகமாகித் தமிழிசையை வளர்க்கும் என்று எதிர்பார்த்தோம். அந்தப் பல்கலைக்கழகமும்வந்தபாடில்லை. அண்ணாமலை இசைக் கழகம் போன்றவை இத்தகைய தொண்டை இலங்கையில் செய்தாகவேண்டும். வாழ்க அண்ணாமலை இசைக் கழகம்! வாழ்க தமிழ் இசை! வாழ்க தமிழ்! வாழ்க இலங்கை!" என்று வாழ்த்தியுள்ளார் பேராசிரியர்.

* * *

"ஒரு பொல்லாப்புமில்லை, எல்லாம் நன்மைக்கே" என்பர் பெரியோர். அதன்படி இந்தத்தடைகளும்கூட ஒரு விதத்தில் நல்லதுதான். இங்கு சில இசைக்கலைஞர்களும் சேர்ந்து நல்லூரில் இக்கல்லூரியை வெற்றியுடன் நடத்திவருவதுடன் இசைவிழாக்களை நடத்தியும், கலைஞர்களை கௌரவித்து உற்சாகமூட்டியும், இசைத்தொண்டை பேராசிரியர் கூறுவதுபோல் சிறப்பாகச் செய்து வருவது போற்றத்தக்கதாகும்.

அரசாங்கத்தின் உதவியின்றி, தமிழ்மக்களின் ஆதரவை நம்பியே, இக்கழகம் நல்ல தொண்டுசெய்துவருகின்றது.

சென்ற திங்களன்று வயலின் வித்வான் சோமாஸ்கந்த சர்மாவுக்கு 'கலைமணி' என்ற பட்டத்தையும் வழங்கி, தங்கப் பதக்கமும் அளித்தனர். நம் கலைஞர்களுக்கு இவ்விதம் உற்சாகமூட்டுவது, இங்கு கலைப் பயிர் செழித்தோங்கச் செய்வதாகும்.

* * *

இலங்கை வானொலியைப் பற்றி சிலபுகார்கள் கேள்விப்பட்டேன். சென்ற ஆண்டு அண்ணாமலையிலே முதல்தரமாகத் தேறிய ஒரே ஒரு ஈழத் தமிழ் கலைஞர், இலங்கை வானொலியில் பாடுவதற்கு மனுச்செய்தாராம். ஆனால் தகுதியில்லை என்று தள்ளிவிட்டதாக ஒரன்பர் மிக மனவேதனையுடன் கூறினார். அந்தக் கலைஞரின் உள்ளம் எப்படி இருக்கும்!

கதாகாலட்சேபத்தைப்பற்றி மற்றொரு புகார், ஒரு மணி நேரம் செய்யும் கதையை முன்கூட்டியே எழுதி இரண்டு பிரதிகளை அனுப்பவேண்டுமாம்! அதிகாரிகள் ஒப்பிய பின், அதை அப்படியே படித்து ஒலிபரப்பவேண்டுமாம்! காலட்சேபத்தில் உயிர் இருக்குமா?

ஆனால் பாவம்! வானொலி அதிகாரிகள் என்ன செய்வர்! அவர்களுக்கு நித்ய கண்டம், ஒரு சின்னக் கைதவறு ஏற்பட்டாலும், சீட்டுக்கிழிந்து விடுகிறது! அப்படியான கெடுபிடி தர்பார்!

இதனால் தமிழ் நிகழ்ச்சிகள் எப்படி மேம்பட முடியும்?

அப்படி சந்தேகமிருந்தால் கதாகாலட்சேபங்களைமுன் கூட்டியே பதிவுசெய்து, அதை சரிபார்த்தபின் ஒலிபரப்பலாமே என்று ஒரு கலையன்பர் நல்ல யோசனை கூறினார்.

(5-ம் பக்கம் பார்க்க)

கெய்ரோ உச்சிமகாநாடு

# "மண்டலசார்பற்ற கொள்கை முக்கியத்துவம் குறைந்து விடவில்லை நீதி அடிப்படையில் உலக சமாதானத்தை நாடுகிறோம்"

## கெய்ரோ உச்சி மகாநாட்டில் நேருவுக்கு ஜனதிபதி நாஸர் புகழாஞ்சலி

கெய்ரோ, அக். 6

**கெய்ரோவில் நேற்றிரவு மண்டலசார்பற்ற நாடுகளின் உச்சிமகாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசிய ஐக்கியஅரபுக் குடியரசு ஜனதிபதி நாஸர், சர்வதேச நிலையில் மாற்றம் ஏற்பட்டிருப்பது காரணமாக மண்டலசார்பற்ற கொள்கை பாதிக்கப்படவில்லை எனக் கூறினர். இந்தக் கொள்கையின் முக்கியத்துவம்பற்றியும், உலக விவகாரங்களில் அது ஆற்றும் பணியைப்பற்றியும் ஜனதிபதி நாஸர் வலியுறுத்தினர்.**

உலகின் இரு பெரிய வல்லரசுகளுக்கிடையே பதற்றம் தணிந்துவிட்டதால் மண்டலசார்பற்ற கொள்கை காலம் கடந்தாகிவிட்டதென்று சிலர் வாதிப்பதை அவர் எதிர்த்தார். சர்வதேச மாறுதலை அது பாதிககாது என்றும் கெய்ரோ மகாநாடு சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த மகாநாடு என்றும் அவர் கூறினர்.

1964-ம் ஆண்டு பெல்கிரேடில் நடைபெற்ற முதல் மகாநாடு ஓரளவு அணுசோதனைத் தடை ஒப்பந்தத்துக்கு வழி வகுத்தது எனக் கூறியநாஸர், இந்த மகாநாட்டில் காலஞ்சென்ற திரு. நேரு ஆற்றிய சேவைகளை வெகுவாகப்புகழ்ந்துரைத்தார்.

### நேருவுக்கு அஞ்சலி

ஸ்ரீஜவஹர்லால் நேருவைப்பற்றி அவர் உருக்கத்துடன் குறிப்பிட்டு, மண்டலசார்பற்ற கொள்கைக்கு திரு. நேரு செயலான ஆதரவாளராய் இருந்தார் என்றும் சுதந்திரம், சமாதானம் ஆகியவற்றை உறுதியுடன் ஆதரித்தார் என்றும் அவர் உண்மையான நண்பர் என்றும் கூறி, இப்போது அவர் நம்மிடையே இல்லாததற்கு வருந்துகிறோம் எனத் தெரிவித்தார். "உலகில் சமாதானம் அல்லது தற்கொலை இரண்டே வழிகள் தான் உண்டு என்பதை அனைவரும் ஒப்புக் கொள்கிருர்கள்" என்றும் அவர் கூறினர்.

"ஐ. நா.வுக்கு வெளியே கோஷ்டிகள் எதுவும் செயல்படுவதை நாம் விரும்பவில்லை. உலகில் ஏழை, செல்வந்தன், வெள்ளையர், கறுப்பர்போன்ற எவ்விதப் பிரிவினைகளையும் நாம் விரும்போம்" என்றுர் நாஸர்.

### சீனவுக்கு இடம் வேண்டும்

சீனவுக்கு ஐ. நா.வில் இடம் கிடைக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினர். உலகில் சமாதானம் மிக அவசியம் என்றும், ஆபிரிக்கா, ஆசியா, லத்தீன் அமெரிக்கா ஆகிய நாடுகளில் நடைபெறும் சிறியுத்தங்களில் வெளிநாட்டுத்துருப்புகளை அமர்த்தக் கூடாது என்றும் அவர் கூறினர்.

மண்டலசார்பற்ற கொள்கை நீதி அடிப்படையில் சமாதானத்தை நாடுகிறது என்றும் ஏகாதிபத்தியம் அகற்றப்பட வேண்டும் என்றும் மேலும் அவர் கூறினர்.

### சாஸ்திரி

திரு. நாஸர் அரபு மொழியில் தம் உரையை ஆற்றிய பொழுது இந்தியப்பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரி அதை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாம். இந்தோனேஷிய அதிபர் டாக்டர் சுகர்னேவுக்கும் கினி அதிபர் செக்ரிடோரேக்கும் மத்தியில் சாஸ்திரி அமர்ந்திருந்தார். டாக்டர் சுகர்னே சாஸ்திரியுடன் அன்புடன் கை குலுக்கிவிட்டு தமது வெளிநாட்டுமந்திரியை அவருக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

தமது பேச்சின் முடிவில் சுதந்திரத்தில் உயிர்ப்பலி கொடுத்த தலைவர்களுக்கு சிறிது மௌனம் அனுஷ்டிக்குமாறு ஜனதிபதி நாஸர் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஒரு நிமிடமௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

### நிகழ்ச்சிநிரல் அங்கீகாரம்

நேற்றைய கூட்டத்தில்வெளிநாட்டு மந்திரிகள் தயாரித்த நிகழ்ச்சிநிரல் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

ஜனதிபதி நாஸரின் பேச்சுக்குப்பின் ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனத்தின் பொதுக் காரியதரிசி பேசுகையில், மண்டலசார்பற்ற கொள்கைக்கு ஆதரவு தெரிவித்தார். நேற்றைய கூட்டம் ஒருமணி நேரம் நடைபெற்றபின் முடிவுற்றது. இன்று இலங்கை நேரப்படி பிற்பகல் 1 மணிக்கு மீண்டும் மகாநாடு ஆரம்பமாகும். இன்றைய கூட்டத்திற்கு லெபனுன் ஜனதிபதி தலைமை தாங்குவார்.

நேற்றைய கூட்டத்திற்கு தலைவர்கள் வரும் பொருட்டு பாதைகள் தற்காலிகமாக மூடப்பட்டபோது வாகனப் போக்குவரத்துகள் ஸ்தம்பித்தன. கார்களில் வரிசையாகச் சென்ற தலைவர்களை எதிர்த்து மக்கள் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வரவேற்ருர்கள்.

### உலகத் தலைவர்கள் வாழ்த்து

அமெரிக்க ஜனதிபதிஜோன்ஸன், ரஷ்யப் பிரதமர் குருஷ்சேவ், ஐ. நா. பிரதம காரியதரிசி யுதாண்ட், பிரிட்டிஷ் பிரதமர் ஹியூம் ஆகியோர் மகாநாடு வெற்றிபெற வேண்டும் என வாழ்த்துத் தெரிவித்து அனுப்பிய செய்திகள் கூட்டத்தில் வாசிக்கப்பட்டன.

மகாநாட்டில் கலந்து கொள்ளும் நாடுகளில் பாதிக்குமேல் ஐ நா.வில் அங்கம் வகிக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

---

# பர்மா, இலங்கை அகதிகளுக்கு நிலம்

சென்னை, அக். 6

இலங்கை, பர்மா ஆகிய நாடுகளிலிருந்து திரும்பும் இந்தியர்களுக்கு உதவிபுரிய இராமநாதபுரத்தில் குடும்பம் ஒன்றுக்கு 5 ஏக்கர் நிலம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இதில் 3 ஏக்கரில் தென்னையும், மிகுதிப்பகுதியில் முந்திரி முதலியனவும் பயிரிட வேண்டும். குடும்பம் ஒன்றுக்கு மாதம் 80 ரூபாய் வீதம் கடன் வழங்கப்படும்.

---

# தமது வெற்றியில் ஜோன்சன் நம்பிக்கை

வாஷிங்டன், அக். 6

தமக்கும், செனட்டர்கோல்ட்வாட்டருக்குமிடையே நடைபெறவிருக்கும் ஜனதிபதி பதவிக்கான போட்டியில், தமது மெஜாரிட்டி அடுத்தமாதம் குறையக்கூடுமாயினும் நவம்பர் 3-ந் திகதி தேர்தலில் தாமே மீண்டும் வெற்றிபெறவிருப்பதாக திரு. ஜோன்ஸன் நம்பிக்கை தெரிவித்திருக்கிருர்.

சமீபத்தில் பொதுமக்களிடையே கணிக்கப்பட்ட கருத்தின்படி ஜனதிபதி ஜோன்ஸனின் பெரும்பான்மை குறைந்திருக்கிறது. இந்நிலை நீடிக்கும் என திரு. ஜோன்ஸன் கருதுகிருர் என்றும் ஜனதிபதி ஜோன்ஸன் குறைந்தது 10 சதவிகித அதிக வாக்குகள் பெறுவார் என வெள்ளை மாளிகை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

---

# காலராவுக்கு பலியாஞேர்

நியுயோர்க், அக். 6

சென்ற ஆண்டு உலகில் காலரா நோயினுல் இறந்தவர்களின் தொகை 21,735 என்றும், இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளிடையேதான் இத் தொகை அதிகம் என்றும் உலக சுகாதார ஸ்தாபன அறிவிப்பு ஒன்று கூறுகிறது.

---

# சீனவில் பாக். நல்லெண்ணக் கோஷ்டி

பீகிங், அக். 6

போக்குவரத்து மந்திரி திரு. ஏ. கே. சாபுர் தலைமையில் சீனவுக்குச் சென்றிருக்கும் பாகிஸ்தான் நல்லெண்ணத் தூது கோஷ்டி, சீனப்புரட்சிபொருட்காட்சிச் சாலைக்கு விஜயம்செய்தது.

---

# பாக். மாணவர் ஆர்ப்பாட்டம்

லண்டன், அக். 6

லண்டனிலுள்ள 4000பாகிஸ்தான் மாணவர்களுக்குப் பிரதிநிதித்துவம் வகிப்பதாகக் கூறிய 20 பாகிஸ்தானிய மாணவர்கள் நேற்று இங்குள்ள பாகிஸ்தான் ஹைகமிஷன்முன் ஆர்ப்பாட்டம் செய்தனர். பாகிஸ்தானில் கைதுசெய்யப்பட்ட மாணவர்களை விடுதலை செய்யுமாறும், பத்திரிகை தடையை அகற்றுமாறும், கிழக்கு பாகிஸ்தானில் ஏற்பட்ட கலகம் பற்றி நீதி விசாரணை செய்யுமாறும் அவர்கள் வற்புறுத்தினர்.

---

# சர்வதேசக் கூட்டுறவுக்கு 1965 ஆண்டு பிரகடனம்

## ஜனதிபதி ஜோன்சன் நடவடிக்கை

வாஷிங்டன், அக். 6

1965-ம் ஆண்டை சர்வதேச கூட்டுறவு ஆண்டாக ஜனதிபதி ஜோன்ஸன் பிரகடனம் செய்துபேசுகையில், தாம் ஜனதிபதியாக மீண்டும் தெரிவு செய்யப்பட்டால் சமாதானத்துக்கு ஒவ்வொரு சாத்தியமான வழியையும்பற்றி ஆராய வெள்ளைமாளிகை மகாநாடு ஒன்றைக் கூட்டப்போவதாய் கூறினர்.

சர்வதேச கூட்டுறவு ஆண்டாக 1965-ம் ஆண்டை பிரகடனம் செய்யவேண்டுமென்ற யோசனையை காலஞ்சென்ற திரு. நேரு 1961-ம் ஆண்டு ஐ. நா. பொதுச்சபை முன் பேசுகையில் முதல் முதல்வெளியிட்டார்.

இதன்படி சென்ற ஆண்டு ஐ. நா. பொதுச்சபை, 1965-ல் கூட்டுறவு நடவடிக்கைகளை விஸ்தரிக்கும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. ஓர் சர்வதேச கூட்டுறவு ஆண்டு உலகம் பரஸ்பரம் அறிந்துகொள்ளவும் ஒத்துழைக்கவும் வாய்ப்பளிக்கும் என அத்தீர்மானம் நம்பிக்கை தெரிவித்தது.

அமெரிக்கா 80 சர்வதேச ஸ்தாபனங்களில் பங்குபற்றி வருகிறது என ஜனதிபதி ஜோன்ஸன் கூறினர். வருடம் ஒன்றுக்கு சுமார் 600 சர்வதேச மகாநாடுகளில் அமெரிக்கா பங்குபற்றுகிறதென்றும் உலகநாடுகளுடன் செய்து கொள்ளப்பட்டிருக்கும் 4300 சாஸனங்கள், ஒப்பந்தங்கள் ஆகியவற்றை நம்பிக்கையுடன் கடைப்பிடித்து வருகிறதென்றும் அவர் கூறினர்.

---

# எல்லையில் சீன - பாகிஸ்தான் கூட்டுச் சூழ்ச்சி?

## இந்தியாவில் சந்தேகம்

புதுடில்லி, அக். 6

சிக்குமுக்கு அப்பால் சீனப் பிராந்தியத்திற்குள் இந்தியப் படைகள் ஊடுருவின என்ற குற்றச்சாட்டு வெறும் சண்டை எனவே இந்திய வெளிவிவகார அதிகாரி ஒருவர் கூறினர். இந்த எல்லைகள் நன்கு வரையறுக்கப்பட்டிருக்கின்றன என்றும், எந்த இடத்திலும் சீனப் பிராந்தியத்துக்குள் இந்தியப் படைகள் ஊடுருவவில்லையென்றும் இது வெறும் பிரசார நோக்கமென்றும் அவர் கூறினர்.

காஷ்மீரில் பாகிஸ்தான் நடத்தும் அத்துமீறல்களும், சீனவின் இவ்வித முயற்சியும் ஒரு கூட்டுச் சூழ்ச்சியோவென சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

சென்ற மாதம் மட்டும் காஷ்மீர் எல்லையில் 200 முறை பாகிஸ்தானியர் அத்துமீறியிருப்பதாகக் கூறப்படுகிறது.

---

# 25 மலேஷிய படகுகளை இந்தோனேஷியர் பிடித்தனர்

## வடமலேஷியாவில் சம்பவம்

கோலாலம்பூர், அக். 6

வட மலேயாக் கரையில் சர்வதேசக் கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த 29 மலேஷிய மீன்பிடிப் படகுகளை இந்தோனேஷிய துப்பாக்கிப் படகு ஒன்று பிடித்துச் சென்றதாக அறிவிக்கப்பட்டது.

குறித்த இடத்தில் 40 மீன்பிடிப் படகுகள் மீன்பிடித்துக் கொண்டிருந்ததாயும், இந்தோனேஷியப் படகு அருகே வந்து 29 படகுகளைப் பிடித்ததாயும் பின் 4 படகுகளில் சிலரைத் திரும்பிச்செல்ல அனுமதித்ததாயும் மிகுதி 25 படகுகளையும், 12 மீன்பிடிகாரர்களையும் அவர்கள் தங்களுடன் பிடித்துச் சென்றதாயும் அறிவிக்கப்படுகிறது.

இவ்விஷயம் பற்றி மலேஷியப் பிரதமர் துங்கு ரஹ்மான் தன் பாதுகாப்பு அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினர்.

மலேஷியாவில் ஏகாதிபத்தியத் தளங்கள் அகற்றப்படும் வரை அதை நசுக்கும் முயற்சி தொடர்ந்து நடைபெறுமென இந்தோனேஷிய பாதுகாப்பு மந்திரி அறிவித்தார்.

---

# ஷோம்பே மீண்டும் வருகிருர்

ஏதென்ஸ், அக். 6

நேற்று கெய்ரோ விமான நிலையத்தில் ஏற்பட்டிருந்த தடைகாரணமாக ஏதென்ஸில் இறங்கிய ஷோம்பே மீண்டும் தனது தூதுகோஷ்டியை அழைத்துக்கொண்டு கெய்ரோ புறப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. ஷோம்பே கெய்ரோவுக்கு வந்தால் அவர் வரவேற்கப்படுவார் என்றும், மகாநாட்டில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவாரா என்பது வேறுவிஷயம் என்றும் ஐக்கிய அரபுக் குடியரசு அதிகாரியொருவர் கூறினர்.

காங்கோ பிரதமர் ஷோம்பேயை ஏற்றிவந்த விமானம் நேற்று கெய்ரோ விமானநிலையத்தில் இறங்க அனுமதிக்கப்பட்டது. பின் அது வேறோர் இடத்தில் கரையிறங்கியது.

லண்டனில் சத்திரசிகிச்சை பெற்ற பர்மா புரட்சிச்சபைத் தலைவர் நீவின் மகாநாட்டில் கலந்து கொள்ளமாட்டாரென அறிவிக்கப்பட்டது.

---

# தமிழ்நாடு நில சுவீகரிப்பு சட்டம்

## சுப்ரீம்கோர்ட் நிராகரித்தது

புதுடில்லி, அக். 6

1961-ம் ஆண்டு தமிழ்நாடு அரசாங்கம் இயற்றிய நில ஆர்ஜித திருத்த சட்டம் செல்லாது என சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்திருக்கிறது. வீடமைப்புத் திட்டங்களுக்காக ஸ்ரீ வஜ்ரவேலு முதலியார் உட்பட பலரது நிலங்களை தமிழ்நாடு அரசாங்கம் திருத்தச் சட்டத்தின் மூலம் ஆர்ஜிதம் செய்தது. இதை எதிர்த்து அவர் சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் செய்திருந்தார்.

ஆந்திரபிரதேசத்தில் சில பஸ் மார்க்கங்களை தேசியமயமாக்கிய அரசாங்கத்தின் நடவடிக்கை செல்லாது என ஹைகோர்ட் அளித்த தீர்ப்பை, அப்பீலிலும் சுப்ரீம் கோர்ட் தள்ளிவிட்டது.

கிராம சேவையாளர் பகுதிகளில்

# அபிவிருத்தி சபைகள்

## அமைக்க மந்திரி சிபார்சு

கொழும்பு, செவ்வாய்

கிராமசேவகர் உள்ள பகுதிகளில் அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்து அவற்றை மாவட்ட இணைப்பு சபைகள் மூலம் செயலாற்றுவிக்கும் முறையில் ஓர் அரிய திட்டத்தை உருவாக்குவதற்கு வேண்டிய வழிவகைகளை அரசாங்கத்திற்கு கிராம தொழில் அபிவிருத்தி மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயகா அறிக்கைமூலம் சமர்ப்பித்துள்ளார்.

அந்த அறிக்கையில் சன சமூகவேலைகளை கிராம அபிவிருத்தி நிகழ்ச்சியில் சேர்க்கும்படியும், முதியோர் கல்வியை கிராம அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றும், கிராம அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நடாத்தப்படும் வேலைகளையிட்டு தெளிவான, திட்டவட்டமான நிலையைக் கூறும்படியும் மந்திரி கேட்டுள்ளார். சில விஷயங்களில்திட்டவட்டமாக அரசாங்கம் நடந்து கொள்ளாதபடியால் சில கிராமத்திட்டங்களில் பல அபிப்பிராயபேதங்களும் எதிர்ப்புகளும் இருந்து வருவதாக மேலும் மந்திரி அந்த மகஜரில் தெரிவித்துள்ளார்.

தான் கொண்டுவரவிருக்கும் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு கிராம சேவையாளர் பகுதியிலும் ஒவ்வொரு கிராம அபிவிருத்தி சபையிருக்கவேண்டுமென்றும் அந்த சபையில் அங்கத்தவர்களை கிராம முன்னேற்ற சபை, கூட்டுறவுச் சங்கம், பெற்றூர் ஆசிரியர் சங்கம், இளம் கமக்காரர் சங்கம் முதலியனவற்றில் இருந்து சேர்த்துக்கொள்ளலாமென்றும் இவர்களேஒரு தலைவரைத் தெரிவு செய்யலாம் என்றும் மந்திரி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

அரசாங்க இலாகாக்கள் கொடுக்கும் ஆதரவிலும் ஒத்துழைப்பிலும் தான் இத்திட்டத்தின் வெற்றி தங்கியுள்ளதென்றும் இந்த சபைகளை நிர்வாக விதிகளின் கீழ் மாவட்ட இணைப்பு சபைகள் இயற்றப்பட்டதுபோல செயல்படவிடவேண்டும் என்றும் மந்திரி தெரிவித்துள்ளார்.

## வெளிநாடு செல்லும் பால்சபைக் குழு

கொழும்பு, செவ்வாய்

இலங்கைப் பால் சபையின் தலைவர் திரு. எம். பி சல்மென் தலைமையில் ஒரு குழு இந்தியா, பாகிஸ்தான் முதலிய நாடுகளுக்குச் சென்று, இலங்கையிலும் நவீன முறையில் இயங்கும் யந்திர சாதனங்கள் மூலம்பால் பொருள் உற்பத்திசெய்ய முடியுமா என்பதுபற்றிப் பரிசீலனை செய்யும் எனத் தெரியவருகின்றது.

இந்தக் குழுவினர் மாத நடுப் பகுதியில் இங்கிருந்து புறப்பட்டு சென்னை, கல்கத்தா, புதுடில்லி, பம்பாய், கராச்சி, லாகூர், பங்களூர் முதலிய இடங்களுக்குச் சென்று நிலைமையை நேரில் பார்வையிடும்,

## குடிக்கவும் தண்ணீர் இல்லை

காங்கேசந்துறை, புதன்

காங்கேசன்துறை பெரிய ஆஸ்பத்திரிக்கு காங்கேசன்துறை பட்டினசபைத் தலைவர் திரு. மு. திடவீரசிங்கம் திடீர் விஜயம் செய்த பொழுது அங்கு நோயாளிகளின் நானாந்த தேவைகளுக்குரிய முக்கிய மருந்துகள் இல்லையெனவும், தாகத்தை தீர்த்துக் கொள்ளுவதற்கு நல்ல தண்ணீர் இல்லையெனவும் இதனுல் உப்புத் தண்ணீரையே நோயாளிகள் குடிக்க வேண்டிய நிர்பப்ந்தம் ஏற்பட்டிருக்கிறதென்றும் அவர் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

ஆஸ்பத்திரியில் நோயாளிகளுக்கு கொடுக்கப்படும் உணவு நல்லதாக இருக்கின்றதென்றும், வார்ட்டுகள் யாவும் துப்பரவாக நல்ல முறையில் வைத்திருக்கிருர்களென்றும் திரு. திடவீரசிங்கத்திற்கு நோயாளிகள் தெரிவித்தனர்.

## நவராத்திரி விழா

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரி பதின்மூன்ருவது ஆண்டு நவராத்திரி இசை அரங்கு நேற்று மாலை பரமேஸ்வராக்கல்லூரி ஆலயத்தில் ஆரம்பமாகியது. எதிர்வரும் புதன்கிழமை வரை பல்வேறு இசை நிகழ்ச்சிகள் இசை அரங்கில் இடம்பெறும்.

இன்று மாலை நடக்கவிருக்கும் நிகழ்ச்சி விபரம்:

6-30 திரு. ஐ. வேலாயுத பிள்ளை—பாட்டு, 7-30 செல்வி சிவச்செல்வி சிவபாதசுந்தரம்-பாட்டு, 8-30 திரு என், கந்தசாமி—பாட்டு.

∴ ∴ ∴

வண்ணை, சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் ஆலயத்தில் இன்றுமுதல் தொடர்ந்து ஒன்பது நாட்கள் வரை நவராத்திரி விழா கொண்டாட இருக்கிருர்கள். விழாவின் போது ஆராதனை, பஜனை, சமய உபந்நியாசம், பக்திப் பாடல் ஆகியன இடம்பெறும்.

∴ ∴ ∴

**தபோவனத்தில்**

கண்டி சச்சிதானந்த தபோவனத்தில் இன்று முதல் தொடர்ந்து 9 நாட்கள் வரை நவராத்திரிவிழா கொண்டாடவிருக்கிருர்கள். விழாவை யொட்டி விசேஷ பூஜைகளும் ஆராதனைகளும் சொற்பொழிவுகளும் இடம்பெறும்.

## கட்டுப்பாட்டு பொருட்களில்லை

காங்கேசன்துறை, செவ்வாய்

காங்கேசன்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் மாசி, சிமெந்து போன்ற கட்டுப்பாட்டுப் பொருட்கள் விநியோகிக்கப்படாமையால் மக்கள் பெரும் கஷ்டப்படுகின்றனர், மற்றைய பலநோக்குக் கூட்டுறவு சங்கங்களில் இப்பொருட்கள் விநியோகிக்கப் பட்டபொழுதும் இங்கு விநியோகிக்கப் படுவதில்லை என மக்கள் குறைபட்டுள்ளனர்.

## பின்லாந்து தூதர்

புதுடில்லி, ஆக, 6

இந்தியாவுக்குரிய பின்லாந்துத் தூதர் ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணனிடம் தமது நியமனப் பத்திரங்களைச் சமர்ப்பித்தார்.

## வானொலிநிகழ்ச்சிகள்

### கொழும்பு

**புதன் 7-10-64**

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதய கீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 பாட்டு, 7-45 மெல்லிசை. 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்தின வாழ்த்துக்கள், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 நேயர் விருப்பம், 7-15 பேச்சு—வி. கே. நல்லையா, 7-30வயலின்—வி. சிவஞானம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பாட்டு—என். சண்முகரத்தினம்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-50 வாத்திய இசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப் பாடல்கள், 7-30 மலைமகள்—இசைச் சித்திரம்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 பெண்ணுலகம், 1-30 வாத்திய இசை, 1-50 மெல்லிசை, 2-10 வீணை—விமலா வெங்கட்டராமன் - ஜி. ரங்கராஜன், 2-40 ஜெயபேரிகை.

மாலை 5-15 வாத்திய கோஷ்டி இசை, 5-45 ஆகாஷ் வாணி ஒலிப்பதிவுகள்.

இரவு 6-05 பிராந்தியச் செய்திகள், 6-15 செய்திக் குறிப்புகள், 6-30 கிராம நிகழ்ச்சி, 7-30 வனவிலங்கு வாரம்-பேச்சு, 7-45 விஷப்பேனு—நாடகம், 8-00 திரைப்பட இசை, 8-30 இம்மாதப் பாடல், 8-35 பொன்னொளிர் பாரதம்-இசை நிகழ்ச்சி, 8-45 குரல் இசை. 9-15 தாளவாத்தியக் கச்சேரி, 9-50 இசை மாலை, 10-00 வீணை—ஜி. ரங்கராஜன்-விமலா வெங்கட்டராமன்,

## மதுரை பல்கலைக் கழகம்

மதுரை, அக். 6

மதுரையில் அமைக்கப்படவிருக்கும் பல்கலைக் கழகத்தில் தமிழ் மொழி, சிற்பம், சித்திரம் ஆகிய துறைகள் இடம் பெறும் என அறிவிக்கப்பட்டது.

## பரீட்சார்த்திகளுக்கு உதவ முடிவு

யாழ்ப்பாணம், செவ்வாய்

தென்மராட்சித் தலைமை ஆசிரியர் கூட்டம் சாவகச்சேரி டிரிபேக் கல்லூரி மண்டபத்தில் வித்தியாதரிசி ஏ. சிவகுரு தலைமையில் நடைபெற்றது.

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் நடத்தும் தமிழ் பிரவேச வகுப்புப் பரீட்சைகளுக்கு சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் வகுப்புகள் நடாத்தி பரீட்சை எடுப்பதற்கு மாணவர்களுக்கு உதவிசெய்வதென்று மேற்படி கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## வலி. மேற்கில் புத்தகக் கண்காட்சி

சுழிபுரம், செவ்வாய்

வலிகாமம் மேற்கு உள்ளுராட்சி மன்றங்களின் ஆதரவில் நடைபெறும் சாகித்திய தமிழ் விழாவில் பிரதான அங்கமாக புத்தகக் கண் காட்சி நடைபெற ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. உலகப் பிரசித்திபெற்ற பெரியார்களின் நூல்களும், அமெரிக்கா, பிரிட்டன் ஐக்கிய தகவல் நிலையங்களிலிருந்து வெளியாகும் நூல்கள் சஞ்சிகைகள் ஆகியவையும் பார்வைக்கு வைக்கப்படும். இக்காட்சியை உடுவில் தொகுதி பாராளுமன்ற அங்கத்தவர் திரு. வி. தர்மலிங்கம் மானிப்பாய் இந்துக்கல்லூரி மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுகிழமை திறந்து வைப்பார். யாழ்ப்பாணக் குடாநாட்டில் முதல் முதலாக உள்ளுராட்சி மன்றங்கள் நடாத்தும் புத்தகக் கண் காட்சி இதுவாகும்.

## 'இருப்பு பணத்தை எடுத்துச்செல்ல அனுமதிக்குக'

கொழும்பு, செவ்வாய்

ஸ்தல ஸ்தாபனங்களில் கடந்த பல ஆண்டுகளாக வேலை செய்த தொழிலாளர்கள் இலங்கையைவிட்டு முற்ருக வெளியேறும் போது பென்சனுடன் நியாயமான இருப்புப் பணத்தை எடுத்துச்செல்ல அனுமதி வழங்குமாறு நிதிமந்திரியைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் அகில இலங்கை அருந்ததியர் சங்க மருதானைக்கிளைக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

கிளைச் சங்கத் தலைவர் திரு. க. மு. காளை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பலர் சொற்பொழிவாற்றினர்.

மக்கள் தங்கள் கருத்துக்களை தெரிவிக்க உரிமையிருக்க வேண்டும் என்றும் பூரண மதுவிலக்கை அமுல் நடத்த வேண்டும் என்றும் அரசாங்கத்தைக் கோரும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.


புத்துணர்ச்சியுடன் திகழ கோயாவின்
மெல்லினிய மணங்கமழும்
**என்டைஸ்** பாவியுங்கள்




ஒரே சுகந்தமுள்ள சோப்பும் டல்க்கும் பாவித்தலே முறையானது. கோயாவின் சுகபோக சோப்பும், வியர்வை துர்நாற்றத்தையும் போக்க வல்ல உலகிலேயே மிக மிருதுவான, மென்மையான டல்க்கும். இவ்வாறு சேர்த்து பாவிப்பதற்கு மிக சிறந்தவை.

ஒவ்வொரு நாளையும் பரிமள புத்துணர்ச்சியுடன் துவங்க, கோயாவின் சுகந்த என்டைஸ் பாவியுங்கள். அதன் இனிய நறுமணம் நாள் முழுவதும் உங்கள் உடலை சூழ்ந்து நிற்கும்.

மற்றும் லவ் எப்பேர்
பாஸ்போர்ட்
ப்ளாக் ரோஸ்
கார்டீனியா
கோயா நம்பர் 5
சுகந்தங்களிலும் கிடைக்கும்

கோயா • லண்டன் • பாரீஸ் • நியு யோர்க்

"உங்களுடைய
**வேப்பர் கிறீம்**
அளிக்குப் நிவாரணம் காரணமாக தடிமனுல் பீடிக்கப்பட்ட போதும் எனது மகனுல் இரவில் அமைதியாகநித்திரை கொள்ள முடிகிறது"
—திருமதி ஐ. டி. எஸ்.




உங்கள் குழந்தையின் நன்மைக்காக எப்பொழுதும் கிறேசன்ஸ் வேப்பர் கிறீமையே கேட்டுவாங்குங்கள்.

எல்லா மருந்துக் கடைகளிலும், பலசரக்குச் கடைகளிலும் கிடைக்கும்.

## சலவைத் தொழிலாளர் காரணமல்ல

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் வண்ணார் குளத்தில் மீன்கள் இறந்து துர்நாற்றம் வீசுவதற்கு சலவைத்தொழிலாளருக்கிடையில் தோன்றிய தகராறு காரணமெனக் கூறப்படுவது ஆதாரமற்ற கூற்று எனவும் சலவைத்தொழிலாளருக்கிடையில் எவ்வித தகராறும் இல்லையென்றும் சலவைத் தொழிலாளர் சங்க நிர்வாகக் குழுக்கூட்டத்தின் முடிவில் அறிவிக்கப்பட்டது.

## வீணைக் கச்சேரி

கொழும்பு, செவ்வாய்

திருக்கேதீச்சர ஆலயத்திருப்பணிநிதிக்காக அண்ணாமலைப்பல்கலைக்கழக சங்கீத பூஷணம் குமாரி சிவநாயகி சிவகுருவின் வீணை இன்னிசைக்கச்சேரி இம்மாதம் 10-ம் திகதி சனிக்கிழமை மாலை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

அண்ணாமலை இசைக்கல்லூரி மாணவியின் இசைவிருந்தும் நடைபெறவிருக்கும் இந்நிகழ்ச்சிக்கு கல்வி அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு. எம். ஜே. பெரேரா தலைமைவகிப்பார்.


7வது வெற்றி வாரம்!

ஸ்ரீ மனோகரா

(யாழ்ப்பாணம்) போன்: 485

தினசரி 6-30 9-30க்கு மட்டு

சனி, ஞாயிறு 4 காட்சிகள்

பாலசர்மா ● அசோகன்

டி.கே. பகவதி ● நரசிம்மபாரதி

ஜெயஸ்ரீ ● விஜயலக்ஷ்மி

மற்றும் பலர் நடித்த

சம்பூர்ண மகாபாரதம்

REGAL — JAFFNA

NOW SHOWING

Sonja Wilde

in

I PASSED FOR WHITE

மங்களகரமான 2வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)

குயின்லன் (தெஹிவளை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) ராஜ் (நீர்கொழும்பு)

வெம்பிளி (கண்டி) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)



எம். ஜி. ராமச்சந்திரன் - சரோஜாதேவி

மற்றும் பலர் நடிக்கும்

பணக்கார குடும்பம்


# 'கடற்கரையில் எதிரியின் மனைவியும் இறந்தவரும் இருந்தனர்'

## பருத்தித்துறை கொலை வழக்கில் கடைக்காரர் சாட்சியம்

யாழ்ப்பாணம், புதன்

இறந்தவராகிய சூரசங்காரத்தையும் எதிரியின் மனைவியையும் வல்வெட்டித்துறை கடற்கரை மணலில் தான் கண்டதாகவும், தன்னைக் கண்டதும் அவர்கள் ஓடி ஒளித்து மறைந்துகொண்டார்கள் என்றும், தான் 'லைட்' அடித்துப் பார்த்தபோது தன்னைக் கடந்து இருவரும் சென்றதாகவும், மறுநாள் இறந்தவர் தனது வீட்டிற்கு வந்து கடற்கரையில் கண்ட காட்சியை எதிரிக்குச் சொல்ல வேண்டாமென்று கூறியதாகவும், கடைச் சொந்தக்காரரான சக்திவேல் பருத்தித்துறை கொலைவழக்கில் நேற்று சாட்சியமளித்தபோது கூறினர்.

தனது மனைவியுடன் இறந்தவர் உடலுறவு வைத்துக்கொண்டதோடு, தனது மனைவியின் தங்கையுடனும் உடலுறவு வைக்க முயற்சித்தாரென்றும் நீதவான் திரு. ஏ. வைத்திலிங்கத்திற்கு அளித்த வாக்குமூலத்தில் எதிரி தெரிவித்திருந்தார்.

பருத்தித்துறை சூரசங்காரம் கொலைவழக்கு நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா கியு. ஸி. முன்னிலையில் நேற்றுக்காலை இரண்டாவது தினமாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிரியின் வழக்கறிஞர் திரு. ரி. கணேசலிங்கம் சாட்சியமளித்த செல்லையா பொன்னுச்சாமியைக் குறுக்குவிசாரணைசெய்தார்.

இவ்வழக்கில் பருத்தித்துறையில் வேலும்மயிலும் இராசசேகரம் எனபவர் வைரமுத்து சூரசங்காரத்தை 63ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27ம் 28ம் தேதியளவில் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

### குறுக்குவிசாரணை

வழ: (நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கபபட்ட பொருளை எடுத்துக்காட்டி) இது என்னவென்று தெரியுமா? - தெரியாது.

வழ: கஞ்சாவை உமக்குத் தெரியுமா? - தெரியாது.

நீதி: கஞ்சா என்றால் என்னவென்று தெரியாதா? - தெரியாது.

நீதி: உமது கடையில் விற்பதில்லையா? - இல்லை.

நீதி: புகையிலையைத் தெரியுமா? - ஆம்.

நீதி: இது கஞ்சா என்று தெரிந்தால் சொல்லும். அதனால் உம்மைச் சிறைக்கு அனுப்பமாட்டேன்.

நீதி: லேகியப்பாக்கெட்டை எங்கே வாங்குவீர்? - எல்லாக் கடைகளிலும் வாங்குவேன்

வழ: உமது கடையின் 'பியர்' இருக்கக் கண்டுபிடித்து வழக்கு நடந்ததா? - 'பியரை' 'கூல்'பண்ணச் சொல்லி ஒரு பொடியன் கொண்டுவந்து தந்தான்.

நீதி: பியரை கூல் பண்ணவா அல்லது பொடியனைக் கூல்பண்ணவா? - பியரைத் தான்.

வழ: அது உமது கடை தானே? - இல்லை.

வழ: அன்று உமது கடைக்கு 15 பேர்வரை வந்தார்களா? - இல்லை நான்கு ஐந்து பேர்.

வழ: வெறியோடு வந்தார்களா? - ஆம்.

வழ: எதிரியும் குடித்திருந்தாரா? - கவனிக்கவில்லை.

வழ: லேகியத்திற்கு இறந்தவர் பணம் கொடுத்தாரா? - ஆம்.

இறந்தவரின் தாயார் மீண்டும் சாட்சியமளித்தபோது குருசிப்பிள்ளையைத் தெரியுமென்றும் அவர் இப்போது இறந்துவிட்டதாகவும், கீழ்க்கோர்ட்டில் இவ்வழக்கு நடந்தபோது அவர் உயிருடன் இருந்ததாகவும் மகன் இறந்தபின் குருசிப்பிள்ளையிடம் வலை வாங்கவில்லையென்றும் கூறினர்.

### கைகளில் முட்டை

பொன்னுத்துரை இராசதுரை சாட்சியமளித்தபோது கூறியதாவது:-

கடற்கரையில் பிரேதத்தைக் கண்டதினம் எனக்கு ஞாபகமிருக்கிறது. முதல் நாள் இறந்தவரை "சிறிஸ் கபே"யில் கண்டேன் அவருடன் வேறு நான்கு பேர் இருந்தார்கள் எல்லோரும் கைகளில் முட்டைவைத்து கதைத்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுள் சாத்திரியார் சந்திர சேகரத்தைத் தெரியும். மற்றவர்களைத் தெரியாது.

### கடற்கரையில் கண்டகாட்சி

கதிரமலை சக்திவேல் சாட்சியமளித்தபோது கூறியதாவது:-

வல்வெட்டித்துறையில் எனக்கு ஒரு கடை இருக்கிறது. அக்கடை இந்திராணி ஆஸ்பத்திரிக்கு முன்னால் இருக்கிறது. இறந்தவரையும், எதிரியையும் எதிரியின்மனைவியையும் எனக்குத்தெரியும். கடற்கரையில் சடலத்தைக்கண்டதினம் ஞாபகமிருக்கிறது அதற்கு மூன்று நாட்களுக்கு முன் ஒரு சம்பவம் நடந்தது.

நான் கடையிலிருக்கும்போது எதிரியின் மனைவி தனியே கடற்கரை நோக்கிச் சென்றார். நான் கடையைப் பூட்டிவிட்டு வீட்டுக்குப்போகும் சமயம், கடற்கரையில் இரு உருவங்கள் தெரிந்தன. அவை என்னைக்கண்டதும் ஓடி ஒளித்து மறைந்தன. நான் அருகில் போய் லைட் அடித்துப் பார்த்தபோது, இறந்தவராகிய சூரசங்காரமும், எதிரியின் மனைவியும் மரத்திற்கு பின்னால் ஒளித்துக்கொண்டிருந்தார்கள் முதல் முதல் நான் பார்த்தபோது இருவரும் கடற்கரை மணலில் இருந்தார்கள். அப்பொழுது சிறிது இருட்டாக இருந்தது. நான் லைட் அடித்துப் பார்த்தபொழுது இருவரும் என்னைத் தாண்டிச் சென்றார்கள்.

இரண்டு நாட்களுக்குப் பின் எதிரி என் கடைக்கு வந்தார். நான் கடற்கரையில் கண்ட காட்சியை விபரமாக கூறினேன். அதன்பின் இறந்தவராகிய சூரசங்காரம் என்னை வீட்டில் வந்து சந்தித்து கடற்கரையில் கண்ட காட்சியை எதிரிக்கு சொன்னாயா என்றார். நான் இல்லை என்றேன். அவர் உடனே நல்லது அதை எதிரிக்குச் சொல்லவேண்டாம் என்று கூறினர். ஆனால் நான் அதற்கு முன்பே எதிரிக்கு கூறிவிட்டேன்.

விதானையார் கனகசபை தணிகாசலம் சாட்சியமளித்தார்.

### எதிரியின் வாக்குமூலம்

பருத்தித்துறை நீதவான் திரு. ஏ. வைத்திலிங்கம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

இன்ஸ்பெக்டர் ஆறுமுகம் எதிரியை என் முன்னிலையில் ஆஜர் செய்தார். நான் எதிரியின் வாக்குமூலத்தைப் பதிவு செய்தேன். அவ்வாக்குமூலத்தில் எதிரி கூறியதாவது: நான் உண்மையைச் சொல்ல விரும்புகிறேன். இறந்தவராகிய சூரசங்காரம் எனது மனைவியுடன் உடலுறவு வைத்துக்கொண்டார். அதோடு எனது மனைவியின் தங்கையுடனும் உடலுறவு வைக்க சூரசங்காரம் முயற்சித்தார். எனது மனைவியின் தங்கை விவாகமாகாதவர். இவ்வாக்குமூலம் அளிப்பதால் எந்த விதமான வெகுமதியையும் நான் எதிர்பார்க்கவில்லை. ஆனால் நீதிமன்றத்தில் பரிசீலிக்கப்படும் என எனக்குத்தெரியும். இவ்வாக்குமூலத்தைக்கொடுக்கும்படி எவரும் என்னைத்தூண்டவில்லை,எனது வாக்குமூலம் எனக்கு மாறாக பாவிக்கப்படுமென எனக்குத் தெரியும்.

### என் மனைவியிடம் காசு வாங்கினார்

63ம் ஆண்டு ஆகஸ்ட் 25ந் தேதி காலை இறந்தவர் எனது வீட்டில் கதைத்துக்கொண்டிருந்தார். அன்று மாலையும் இறந்தவராகிய சூரசங்காரம் எனது வீட்டிற்கு வந்தார். நான் எனது மனைவியிடம் பணம்கேட்டேன். அவர் தர மறுத்துவிட்டார். ஆனால் இறந்தவராகிய சூரசங்காரம் பணம் கேட்டபோது அவருக்கு மனைவி ஒரு ரூபாய் கொடுத்தார். அப்பணத்தைச் சூரசங்காரம் என்னிடம் தந்தார்.

### சத்தியம் செய்தேன்

வல்வெட்டித்துறையில் கடை வைத்திருக்கும் சக்திவேலை அவரின் கடையில் சந்தித்தபோது, தான் ஒரு விஷயம் சொல்லப்போவதாகவும், அதைப்பற்றிச் சூரசங்காரத்திடம் நான் கேட்பதில்லையென்று சத்தியம் செய்துதரும்படியும் கூறினர். நான் அவருக்குச் சத்தியம் செய்துகொடுத்தேன். எனது மனைவியும் இறந்தவராகிய சூரசங்காரமும் முதல்நாளிரவு 9 மணியளவில் ரோட்டு ஓரத்தில் கதைத்துக்கொண்டிருந்ததாகவும் பின்னர் இருவரும் கடற்கரையிலுள்ள கேணியை நோக்கிச் சென்றதாகவும் கூறினர்.

### உடல்முழுதும் நடுங்கியது

அப்பொழுது நான் அவரிடம் என் மனைவியும் சூரசங்காரமும் என்ன செய்துகொண்டிருந்தார்கள் என்று கேட்டேன். அவர்கள் இருவரும் கதைத்துக் கொண்டிருந்தார்கள் என்று கடைக்காரச் சக்திவேல் கூறினர். உடனே என் உடல் முழுவதும் நடுக்கமேற்பட்டதுடன் வியர்த்து ஒழுகியது. நான் இது பற்றிக் கேட்டபோது முதலில் எனது மனைவி மறுத்தார். உண்மை சொல்லாவிட்டால் அவரை அடிக்கப்போவதாகக் கூறினேன். அதன்பின் தான் வரும்போது சூரசங்காரம் வழியில் சந்தித்ததாகவும், தான் அவரிடம் ஏன் படத்திற்கு போகவில்லையென்று கேட்டதாகவும் மனைவி கூறினர். என் மனைவி உண்மை பேசவில்லையெனக் கருதினேன்.

நாங்கள் இருவரும் போகும்போது சூரசங்காரம் எங்களைத் தேடிக்கொண்டுவந்தார். ஏன் எனது மனைவியை ஆஸ்பத்திரியில் விடவில்லையென்று சூரசங்காரம் கேட்டார். எனது சகோதரி வீட்டில் இருப்பதால் மனைவியைக் கூட்டிச் செல்வதாகக் கூறினேன்.

### துரோகம் செய்யாதே

கடற்கரை சம்பவத்தைப் பற்றி சூரசங்காரத்தைக் கேட்டபோது அவர் மறுத்துவிட்டார். அதன்பின் என் மனைவியுடன் ரோட்டில் கதைத்ததாக ஒப்புக்கொண்டார். பின் மூவரும் எங்கள் வீட்டிற்கு சென்றோம். கடற்கரை சம்பவத்தை எனக்கு கூறியவரிடம் மூவரும் போய் நேரில் அறிந்துகொள்ள வேண்டும் என்றேன். அதற்கு சூரசங்காரம் சம்மதித்தார். இறந்தவர் ஒரு கெட்டநடத்தையுடையவரென்பது எனக்குத் தெரியும். எனக்கு நம்பிக்கைத்துரோகம் செய்யாதே என்று அவரிடம் கூறினேன். தான் 'நம்பிக்கைத் துரோகம் செய்யமாட்டேன்' என்று அவர் கூறினர்.

சகோதரியை ஆஸ்பத்திரியில் இருந்து கொண்டுவர நானும் மனைவியும் புறப்பட்டோம். இறந்தவர் எனக்காக காத்திருப்பதாக கூறினர். நானும் மனைவியும் கடந்துசெல்லும்போது, மனைவி எனக்கு உண்மையை சொல்ல ஆரம்பித்தார். கடந்த 10 தினங்களாகவே சூரசங்காரம் தன்னுடன் தமாஷ் செய்ய ஆரம்பித்துள்ளதாகவும், தனது மூத்த சகோதரியின் பிள்ளையை தான் தூக்கிவரும்சமயம், இறந்தவர் பிள்ளையை தன்னிடமி

(6-ம் பக்கம் பார்க்க)


வரி விளம்பரம்

### புத்திரபாக்கியம்

பெண்களில் மலடு கிடையாது. புத்திரபாக்கியம் இல்லையே என்று கவலை இனி வேண்டாம். நூற்றுக்கணக்கானோர் என்னிடம் மருந்து சாப்பிட்டு பிள்ளையும் பெற்றிருக்கிறார்கள். பொ. செல்லையா, ஆயுர்வேத வைத்தியர், கந்தர்மடம், யாழ்ப்பாணம். 882


### திருத்தம்

5-10-64 'ஈழநாடு' இதழ் 5-ம் பக்கத்தில் வெளியான அல்லைப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு மனேஜர் தேவை என்ற விளம்பரத்தில் ரொக்கப்பிணை ரூ 100-00 என்பதற்குப் பதிலாக ரூ. 1000-00 என்றிருக்கவேண்டும்.

### ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வானொலி அதிகாரிகள் இதை மறுக்க நியாயமில்லை.

செல்வங்கள் கேட்டால் நீ கொடுக்கவேண்டும்; சிறுமைகளென்னிடமிருந்தால் கெடுக்கவேண்டும்; கல்வியிலே மதியினை நீ தொடுக்கவேண்டும்; கருணையினால் ஐயங்கள் கெடுக்கவேண்டும்; தொல்லைதரும் அகப்பேயைத் தொலைக்கவேண்டும்; துணையென்று நின்னருளைத் தொடரச் செய்தே நல்லவழி சேர்ப்பித்துக் காக்கவேண்டும். "நமோ நம ஓம் சக்தி"யென நவில்லாய் நெஞ்சே.

— மகாகவி பாரதியார்

நம்பிக்கைத்

# துரோகம்செய்யாதே” என்றேன்; ‘செய்யமாட்டேன்’ என்றுன்

## நீதவானுக்கு எதிரி அளித்த இரகசிய வாக்குமூலம்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ருந்து வாங்கும்போது, தன்னைப் பிடித்தார். தான் அதற்கு ஒன்றும் கூறவில்லை என்றும் கூறினுர்.

ஏன் எனக்கு அதுபற்றி சொல்லவில்லை என்று கேட்ட பொழுது பயத்தின்காரணமாக சொல்லவில்லையென்ருர். மற்றொரு சமயம் தான் குளித்துக்கொண்டிருந்த போது தனக்கு தண்ணீர் வீசினுர். அதனையும் பயத்தின்காரணமாக எனக்குச் சொல்லவில்லையென்று கூறினுர்.

நான் படத்திற்கு போன இரவு இறந்தவர் என்ன செய்தார் என்று கேட்டேன் தான் வீதியில் வந்துகொண்டிருந்தபோது, சூரசங்காரம் தனது கையைப் பிடித்துக் கடற்கரைப்பக்கம் இழுத்துச் சென்றதாகவும், அப்பொழுது தான் நான் வருவேன் என்று கூறியதாகவும், அதற்கு நான் படத்திற்கு போனதாக இறந்தவர் கூறியதாகத் தெரிவித்தார்.

சத்தம் போட்டிருந்தால் சனங்கள் வந்து காப்பாற்றியிருப்பார்களென்றும் ஏன் சத்தம் போடவில்லையென்றும் கேட்டதற்கு தான் சத்தம் போடவில்லையெனக் கூறினர். அப்பொழுது இதற்கு எனது மனைவியும் உடந்தையெனக் கருதினேன். கடற்கரையில் தாங்கள் கதைத்துக் கொண்டிருந்ததாகவும் பின் தன்னை விட்டுவிட்டு சென்றதாகவும் கூறினுர். நான் உண்மை பேசவில்லையெனப் பயமுறுத்திக் கையைப் பிடித்ததும், கடற்கரையில் சூரசங்காரத்துடன் உடலுறவு வைத்துக் கொண்டதாகக் கூறினுர்.

யாராவது லைட் அடித்தார்களா என்று நான் கேட்டேன் அதற்கு தாங்கள் கடற்கரையிலிருந்தசமயம் யாரோ ‘குட்டி குட்டி’ என்று கூப்பிட்டதாகவும், இறந்தவர் போய்ப்பார்த்துவிட்டு வந்து தன்னுடன் உடலுறவு கொண்டதாகவும் கூறினுர். அப்பொழுது எனக்கு கோபமும் வெட்கமும் ஏற்பட்டதுடன் கண்களும் கலங்கின. அதன்பின் மனைவியை வீட்டிற்கு கூட்டிச் செல்றேன்.

அந்த நேரத்தில் அவர் எனது மனைவியை மட்டும் கெடுக்கவில்லை. எனது மனைவியின் சகோதரியையும் கெடுக்க நினைத்தார். பல பெண்களையும் பாழாக்கிவிட்டார். இன்னும் பல பெண்களை பாழாக்கக் கூடும். அதனுல் அவனது கைகளையும் கால்களையும் முறித்துவிட நினைத்தேன். வழியில் செல்லும்போது எனது மனைவியும் எனக்கு நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டாள் என்று கருதினேன்.

சூரசங்காரத்தை தீர்த்துக்கட்ட எண்ணினேன். அந்த எண்ணத்துடன் கள்ளுக் கடைக்குப்போய் குடித்தேன். இறந்தவரும் என்னுடன் கள்ளுக் குடித்தார். அதன்பின் வீடு சென்றேம்.

நான் எனது மனைவியிடம் தேநீர் கொண்டுவரும்படி கூறினேன். மனைவி தேநீர் கொண்டு வந்தார். எனக்குத் துரோகம் செய்த மனைவி தேநீரிலும் நஞ்சிடுவார் எனக் கருதி குடிப்பதாக நடித்து தேநீரை ஊற்றிவிட்டேன். இறந்தவர் இரண்டாவது முறையும் எனது மனைவியிடம் தேநீர் வாங்கிக் குடித்தார். பின் மருதங்கேணி புறப்பட்டோம்.

அதன்பின் நாங்கள் கடைக்குச் சென்று சாராயம் குடித்த பின் முட்டை சாப்பிட்டோம். இறந்தவர் ஒருவரிடம் ஒரு பாக்கட் கஞ்சாவும், கஞ்சா சுருட்டும் வாங்கினுர். அவர் சுருட்டை பற்ற வைத்து என்னிடம் தந்தார். நான் கஞ்சா குடிக்கும் பழக்கமில்லாததால் குடிப்பது போல் நடித்தேன். பின் வேறு ஒரு கடைக்குப் போய் இடியப்பம் சாப்பிட்டோம். அதன்பின் நாங்கள் புறப்பட்டோம். இறந்தவர் தனது வேட்டியை ஐ. ஆர். சி. போல சண்டிக்கட்டு கட்டினுர். அதன்பின் மருதங்கேணி போக கார் பிடிக்கச் சென்ருேம். கார் கிடைக்காததால் பொலிகண்டி நோக்கி நடந்து சென்ருேம்.

பாப்சாலை சந்தியில் உள்ள கல்வெட்டு ஒன்றில் சூரசங்காரம், தன்னுல் இனி நடக்க முடியாதெனப்படுததுவிட்டார் கனகரத்தினமும் எனது தம்பியும் அவரை விட்டுவிட்டு வரும்படி கூறினுர்கள். அவரைக் கொண்டுவரும் விதம் எனக்குத் தெரியுமென்ற கூறி அவர்களை அனுப்பினேன்.

அந்த இடத்தில் நானும் சூரசங்காரமும் மட்டும்தான் இருந்தோம். நான் எதிர்பார்த்த சந்தர்ப்பம் அது தான். சூரசங்காரத்தை 10 நிமிடம்வரை எழுப்ப முயற்சித்தேன், ஆனுல் அவரில் பேச்சு மூச்சில்லை.

### 30 நிமிடம் சிந்தித்தேன்

அவர் செய்ததைப் பற்றி சுமார் 30 நிமிடங்கள் பலமாகச் சிந்தித்தேன். எதிர்காலத்தில் இன்னும் பலரை கொடுத்துவிடுவான் என சிந்தித்தேன். உலகத்திற்கு அவனை ஒரு உதாரணமாக்க விரும்பினேன். அப்படியானுல் மற்றவர்களுக்கு அது ஒரு பாடமாக இருக்குமெனக் கருதினேன், கடற்கரையில் இறங்கி ஒரு கல்லை தூக்கிக் கொண்டு சூரசாங்காரத்திற்கு அருகில் வந்தேன், கல்லை நிலத்தில் போட்டுவிட்டு அவனை கொலை செய்தால் என்ன தண்டனை கிடைக்குமென்றும், எனது சகோதரர்கள், சகோதரிகள், குடும்பத்தினரின் எதிர்காலத்தைப் பற்றியும் சிந்தித்தேன். நான் செய்யும் குற்றத்திலும் பார்க்க அவன் செய்த குற்றம் பெரியது என்று எனக்குத் தோன்றியது. இருப்பதில் பார்க்க இறப்பதே மேல் என்று எண்ணினேன்.

ஒரு மணித்தியாலத்தின் பின் கல்லை மறுபடியும் தூக்கி மேலே உயர்த்தி, சூசரங்காரத்தின் தலையில் அடித்தேன். கல்லு மூன்று நான்கு துண்டுகளாக உடைந்தது. நான் குனிந்து பார்த்தபோது எதுவிதமான சத்தமும் கேட்கவில்லை. அவரின் காலைப் பிடித்து இழுத்து கடற்கரைக்கு கொண்டு வந்தேன். அதன்பின் பொலிகண்டிக்கு நடந்து வந்தேன்.

நீதவான் சாட்சியமளித்த பின், முதலியார் விஜயநாதனும், இன்ஸ்பெக்டர் ஆறுமுகமும் சாட்சியமளித்தனர்.

எதிரி தரப்பு, முடிக்குரிய தரப்பு வழக்கறிஞர்களின் தொகுப்புரை நடந்தபின் நீதியரசர் தொகுப்புரை நிகழ்த்தினுர். ஜூரிகள் தங்கள் முடிவைத் தெரிவித்தபின் நீதியரசர் தீர்ப்பு வழங்கினுர்.

# ராணுவம் உதவி

புதுடில்லி, அக். 6

வடகிழக்கு எல்லைப்புறப் பகுதியில் பஞ்சத்தினுல் அவதியுறும் கிராமவாசிகளுக்கு இந்திய ராணுவம் உதவியளித்து வருகிறது.

# பிரயாணியாகவந்த கள்வர்!

கொழும்பு, செவ்வாய்

இனம் தெரியாத ஒரு நபர் ‘3 ஸ்ரீ’ பொறித்த வாடகைக் கார் ஒன்றை அமர்த்திக் கொண்டு கம்பஹா சென்ருர். செல்லும் வழியில் பேஸ்லைன் வீதியில் சாரதியை அடித்து அவரைக்காரிலிருந்து அப்புறப்படுத்தினுர். அதன் பின்னர் கார் மடுன்கொட என்ற காட்டிற்கு எலுத்துச்செல்லப்பட்டு காரிலுள்ள பாகங்கள் யாவும் களவாடப்பட்டன.

கம்பஹா பொலிசைச்சேர்ந்த திரு. ஒஸ்மன்ட் விசாரணை நடத்தினுர்.

# ப. நோ. கூ, சங்கத்தில் திருட்டு

மாவிட்டபுரம், செவ்.

பளை வீமன்காமம் பலநோக்கக் கூட்டுறவுச் சங்கத்தில் நேற்று முன்தினம் இரவு சுமார் 100 ரூபா பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டுள்ளது. கூரையைப் பிரித்து இத்திருடு நடந்திருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது.

இது சம்பந்தமாக காங்கேசன் துறை பொலிஸைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் சி, சிவயாதம் விசாரணை நடத்தி வருகிருர்.

# புதிய கைத்தொழில்களை ஆரம்பிக்க வேண்டும்

## உடுப்பிட்டி எம். பி. யின் யோசனை

உடுப்பிட்டி, செவ்.

“வேலையில்லாப் பிரச்னை நமது இனத்தையே அழிக்கக் கூடிய ஓர் பிரச்னையாகப் பரிணமிக்கலாம். இப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு விஞ்ஞான முறையில் விவசாயத்தையும் கைத்தொழில்களையும் மேற்கொள்ள வேண்டும். எனது குரும்பசிட்டி சன சமூக நிலையத்தினதும் கிராம முன்னேற்றச் சங்கத்தினதும் வருடாந்த விளையாட்டுப் போட்டியின் போது பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பேசுகையில் உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

“காங்கேசன் துறை, துறைமுகத்தை விருத்திசெய்தால் 10 ரூபா பெறுமதியான சீமெந்தை ஆறரை ரூபாவுக்குப் பெறமுடியும். காங்கேசன் துறையைச் சீர்திருத்தினுல் இந்தியாவிலிருந்து தமிழர்கள் படையெடுத்துவிடுவார்கள் என்று சில அரசியல் வகுப்பு வாதிகள் பூச்சாண்டி காட்டுகிருர்கள் இலங்கையில் உப்பு உற்பத்தி செய்யத் தகுந்த ஒரே இடம் ஆனையிறவுதான் என்று ஜப்பானிய நிபுணர் கூறியுள்ளார். இவைமீது அரசாங்கம் அக்கறை எடுத்ததா? அரசாங்கம் வழிகாட்டாவிட்டால் நாம் அதைச்செய்ய முன்வரவேண்டும். தமிழர்களில் பணம் படைத்தவர்கள் நமது பகுதிகளில் புதிய கைத்தொழிற்சாலைகளை ஏற்படுத்தவேண்டும்.

ஓர் நாட்டின் பத்திரிகைச் சுதந்திரத்தைத் தடைசெய்வது ஜனநாயகத்தின் ஆணிவேரையே அழிப்பது போலாகும் பத்திரிகைச் சுதந்திரம் பறிபோனுல் கட்டாயம் நாடு சர்வாதிகார நாடாக மாறும். ஜனநாயகம் பறிபோகாமல் இருக்கவேண்டுமானுல் பொது மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்.

திரு. சுப. இளங்கீரன் பேசுகையில், “செழிப்பான மலைநாட்டுப் பிரதேசங்களில் இன்றும் சரியாகப் பயிர்கள் உற்பத்தி செய்யப்படவில்லை; மனித உழைப்புச் சக்தியை உருவாக்கக் கூடிய புதிய பொருளாதாரக் கல்வித்திட்டம் ஏற்படுத்தப்படவில்லை. உணவுப் பிரச்னை தீர்க்கப் படாதவரையில் ஒரு காலமும் நாம் முன்னேற முடியாது” என்று கூறினுர்.

வடமராட்சிப் பகுதி காரியாதிகாரி திரு. ஜே. டி. ஆர்னேல்ட் பேசுகையில், இலங்கை அரசாங்கம் வருடத்திற்கு 6 லட்சம் பெறுமதியான வெங்காயக்கூடைகளையாழ்ப்பாணத்திற்கு இறக்குமதிசெய்கிறதென்றும் இவ்வெங்காயக் கூடைகள் பின்னும் பயிற்சி வகுப்புக்கள் யாழ்ப்பாணத்திலுள்ள கிராமங்களில் நடைபெறவேண்டும் என்றும் அதில் பெண்கள் முக்கிய பங்கெடுத்து இவ் ஆறு லட்சம் ரூபாவையும் யாழ்ப்பாணத்திற்குள்ளேயே தேக்கலாம் என்றும் கூறினுர்.

உடுப்பிட்டி கிராமசபைத் தலைவர் திரு. ஆர். ஆர். தர்மரத்தினம் பேசுகையில், “வெளிநாட்டிலிருந்து பொருட்கள் இறக்குமதி செய்வது தடை செய்யப்படவேண்டும். உள்நாட்டு உற்பத்திகளுக்கு அரசாங்கம் போதிய உதவி அளித்து ஊக்குவிக்க வேண்டும் என்று கூறினுர்.

திரு. ஜி. குமாரவேலு, திரு. ஜெகநாதன், திரு. கே. சிவப்பிரகாசம், திரு. கே. பசுபதி ஆகியோரும் பேசினர்.

விளையாட்டுப்போட்டியில் சிவப்புஇல்லம் 105 புள்ளிகளால் வெற்றியீட்டியது. வெற்றி வீரர்களுக்கு திரு. மு. சிவசிதம்பரம் பரிசில்களை வழங்கினுர்.

# கெய்ரோவில் மீண்டும் ஷோம்பே

கெய்ரோ, அக். 6

கெய்ரோ மகாநாட்டில் பிரவேசிக்க காங்கோ பிரதமர் திரு. ஷோம்பே இன்று மேற்கொண்ட முயற்சி மீண்டும் தோல்வியில் முடிந்துள்ளது. அரசியல் நடவடிக்கையில் கலந்துகொள்ளாத வகையில் அவர் இங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

ஷோம்பேயின் வரவால், கெய்ரோ மகாநாடு இன்று அரைமணிநேரம் தாமதித்து ஆரம்பமானது. அவரின் வரவு பல தலைவர்களுக்கு ஆச்சரியத்தை அளித்துள்ளது. மகாநாட்டில் கலந்து கொண்டால் தாங்கள் வெளியேறப் போவதாக சில தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

பார்லிமெண்ட்

# மீண்டும் கிரிதாரை ஆலை விவகாரம்

கொழும்பு, செவ்வாய்

பார்லிமெண்ட் சம்பிரதாயப்படி புதன்கிழமை தனியார் பிரேரணைகள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் தினமாதலால் நாளை புதன்கிழமை ‘கிரிதரை’ ஆலை விவகாரத்தை எதிர்க்கட்சியினர் கிளப்பக் கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது. கிரிதரை ஆலை விவகாரம் கிளப்பப்பட்டால் வாக்கெடுப்பு நடைபெறாமல் அதைப் பேசித் தீர்ப்பதற்கு முயற்சி செய்யப்படுமென்றும் பார்லிமெண்ட் வட்டாரங்கள் கருதுகின்றன. எனினும் வாக்களிப்பு நடைபெறுனுலும் அந்த நிலைமையைப் பாதுகாத்துக் கொள்ளும்பொருட்டு அரசாங்கக்கட்சி எம். பி. க்கள் அனைவரும் கூட்டத்திற்குச் சமுகமளிக்கவேண்டுமென்று மாதிரி சிறிவர்த்தன கேட்டுள்ளார்.




இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 7-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது